# விடை தேடும் வினாக்கள்



விடை தேடும் வினாக்கள்

www.saivamonline.com

முனைவர். இரா. செல்வக்கணபதி

# Contact Details


www.saivamonline.com

www.facebook.com/saivamonline

@saivamonline Saivam Online

sspathipagam@gmail.com

+91 94440 21113

Pay +91 94440 21113

9444021113@UPI




# 1. விடை தேடும் வினாக்கள்

தமிழ் இலக்கியங்களின் உள்ளீடு: புறக்கட்டமைப்பு: வரலாறு குறித்த பல நூல்கள் இன்று தமிழில் வெளி வந்து விட்டன. இத்தகு முயற்சி ஏறத்தாழ ஒரு நூறு ஆண்டுகளுக்கு முன் தொடங்கப் பெற்றது. மரபு வழித் தமிழ் அறிஞர்கள், ஆங்கிலம் கற்ற தமிழ் வல்லுநர், வடமொழி வல்ல தமிழ்ச் சான்றோர், சமய உணர்வு மிக்க தமிழ்ப்புலவர்கள் எனப்பல பிரிவினர் ஆங்கிலத்திலும், தமிழிலுமாகப் பல நூல்களை எழுதி வெளியிட்டனர். இவர் தம் முயற்சிகள் பாராட்டுக்குரியன. தமிழ் இலக்கியங்களை இனங்காணவும் - ஏற்றுப் போற்றவும் இத்தகு நூல்கள் துணை நின்றன.

வருத்தத்துடன் நினைவு கூர வேண்டிய செய்தி ஒன்று உண்டு. தமிழ் இலக்கியம் பற்றி இருபதாம் நூற்றாண்டின் தொடக்ககாலத்தில் மேற் கொள்ளப் பெற்ற ஆய்வுகளின் தரமும், நம்பகமும் காலப்போக்கில் தேயத் தொடங்கின. முதல் ஆய்வு நிகழ்த்தியோர் எண்ணிக்கையில் குறையத் தொடங்கினர். தேடிக்காணும் முயற்சி அருகித் தொகுத்துக்காட்டும் போலித்தனம் தலைத்தூக்கலாயிற்று. மிகப் பெரிய வளர்ச்சி கண்டிருக்க வேண்டிய தமிழ் இலக்கிய முயற்சிகள் தேக்கநிலை எய்தின.

www.saivamonline.com

## விடை தேடும் வினாக்கள்

இந்திய விடுதலைக்குப் பிறகு, தமிழ் இலக்கியம் பற்றியும், தமிழ் இலக்கிய வரலாறு பற்றியும் வெளிவந்த நூல்கள் பல. பல்கலைக் கழகங்கள் பல்கிப் பெருகியும், பரவலாகத் தமிழ் உணர்வு செழித்தும், ஏனோ அறிஞர்களின் முயற்சிகளில் அழுத்தம் காணப்படவில்லை. விரல் விட்டு எண்ணத்தக்க ஒரு சிலரே இக்காலப் பகுதியில் உழைத்து ஆய்வு நிகழ்த்தினர். பலர் மேலெழுந்தவாரியான மக்கள் சுவையுணர்விற்காகவே இலக்கிய ஆய்வையும், பாடத்திட்டங்களுக்காகவே இலக்கிய வரலாறுகளையும் எழுதிக் குவித்தனர். பத்துப் பதினைந்து முறை அச்சேற்றப்பட்ட சிலரது இலக்கிய வரலாறுகள், பட்டத் தேர்வு மாணாக்கர்களுக்காக எழுதப்பட்ட வினா விடைகளாக - குறிப்பேடுகளாகவே நின்றன. இந்நிலையில் கூர்த்த அறிவு படைத்தார் உள்ளங்களில் தமிழ் இலக்கியம் பற்றி எழும் நூற்றுக்கணக்கான வினாக்கள் விடை காணப்படாது நிற்கின்றன.

---

**தமிழ் இலக்கியம் பற்றி இருபதாம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்தில் மேற்கொள்ளப் பெற்ற ஆய்வுகளின் தரமும் நம்பகமும் காலப்போக்கில் தேயத் தொடங்கின. முதல் ஆய்வு நிகழ்த்தியோர் எண்ணிக்கையில் குறையத் தொடங்கினர். தேடிக்காணும் முயற்சி அருகித் தொகுத்துக்காட்டும் போலித்தனம் தலைத்தூக்கலாயிற்று.**

---

இலக்கியங்களில், விடை கண்டு காட்ட வேண்டிய கடமையுடையவர்கள் ஏனோ வாளாவிருக்கின்றனர்.

இலக்கிய ஆய்வு, மற்றும் இலக்கிய வரலாற்று ஆய்வு என்பன அரிய முயற்சிகளை அடித்தளமாகக் கொண்டு நிகழ்த்தப்பட வேண்டுவன. இத்தகு துறையில் ஆய்வு நிகழ்த்துவோருக்கு, இதுவரை இத்துறையில் நிகழ்த்தப்பெற்ற ஆய்வுகளைப் பற்றிய அறிமுகம் முதலாவதாகத் தெரிந்திருக்கவேண்டும். மொழி வரலாற்றுக் கண்ணோட்டம் வேண்டும். மற்றும், ஆய்வு மேற்கொள்ளும் இலக்கியம் தோன்றிய மண்ணின், அரசியல் வரலாறு - சமூக இயல்புகள் - சமய வரலாறு -



www.saivamonline.com

பொருளாதார நிலை - மக்கள் இன நாகரிக வரலாறு முதலியன பற்றிய அறிவும் - உணர்வும் இன்றியமையாதன. ஒத்த பிறமொழிகளின் வளர்ச்சி - தாக்கம் பற்றியும் ஓரளவு ஆய்வாளன் அறிந்திருக்க வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக இலக்கியத்தின் சமூகப் பயன்பாடுபற்றிய பார்வை இலக்கிய ஆய்வாளனுக்கு வேண்டும். மேலும், எந்த ஒரு முடிவையும் முன்னதாக எடுத்துக் கொண்டு, அதனை உறுதி செய்ய, ஆதாரங்களைத் தேடாது ஆய்வின் போக்கில் உண்மைகளைக் கண்டு காட்டும் பண்பாடு ஆய்வறிஞனுக்கு வேண்டும். மரபுகளையும் - நம்பிக்கைகளையும் உடைத்து மறு பரிசீலனை செய்யும் துணிவு ஆய்வாளன் நெஞ்சில் வேர்விடல் வேண்டும்.

---

**இந்திய விடுதலைக்குப் பிறகு, தமிழ் இலக்கியம் பற்றியும், தமிழ் இலக்கிய வரலாறு பற்றியும் வெளிவந்த நூல்கள் பல. பல்கலைக் கழகங்கள் பல்கிப் பெருகியும், பரவலாகத் தமிழ் உணர்வு செழித்தும், ஏனோ அறிஞர்களின் முயற்சிகளில் அழுத்தம் காணப்படவில்லை. விரல் விட்டு எண்ணத்தக்க ஒரு சிலரே இக்காலப் பகுதியில் உழைத்து ஆய்வு நிகழ்த்தினர். பலர் மேலெழுந்தவாரியான மக்கள் சுவையுணர்விற்காகவே இலக்கிய ஆய்வையும், பாடத்திட்டங்களுக்காகவே இலக்கிய வரலாறுகளையும் எழுதிக் குவித்தனர்.**

---

மேற்குறித்த பண்புகள் முற்றும் அமைந்த ஆய்வாளர்களைத் தமிழ் இலக்கியம் பெறும் காலத்தில்தான், பல வினாக்களுக்கு முழுமையான விடை கிடைக்கக்கூடும்.

இதுவரை நிகழ்த்தப்பெற்ற இலக்கிய ஆய்வுகள் மற்றும் இலக்கிய வரலாற்று முயற்சிகளின் போக்கிற்கு ஒரு சான்று காணலாம். சிலப்பதிகாரம் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுவதாக வைத்துக் கொள்வோம். சிலம்பின் ஆசிரியர்



www.saivamonline.com

இளங்கோவடிகள்: இது மூன்று குறிக்கோள்களை அடிப்படையாக விளக்கி நிற்பது, மூன்று காண்டங்களையும், முப்பது காதைகளையும் உடையது. இதைக் குடிமக்கள் காப்பியம் என்பர். இந்நூலுக்கு அரும்பத உரையும், அடியார்க்கு நல்லார் உரையும் உண்டு. இது முத்தமிழ்க் காப்பியம் என்றும் கூறப்படும். இதனையும் மணிமேகலையையும் இணைத்து இரட்டைக்காப்பியம் எனக் கூறுவர். இது ஐம்பெருங் காப்பியங்களுள் முதலாவது. 'நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்' என இந்நூலைப் பாரதியார் போற்றியுள்ளார். இந்நூல் பண்டைக்காலத் தமிழ் மக்களின் நாகரிகத்தையும், பண்பாட்டையும் அழகுறச் சித்திரிப்பது. இவ்வாறு ஒரு நூலின் உள்ளீட்டையும் - கட்டமைப்பையும் - புற ஒழுங்கையும் மேலெழுந்த வாரியாகச் சுட்டிப் போவதையே இலக்கிய வரலாற்று நூல்களில் காண்கிறோம்.

---

**இலக்கியத்தின் சமூகப் பயன்பாடுபற்றிய பார்வை இலக்கிய ஆய்வாளனுக்கு வேண்டும். மேலும், எந்த ஒரு முடிபையும் முன்னதாக எடுத்துக் கொண்டு, அதனை உறுதி செய்ய, ஆதாரங்களைத் தேடாது ஆய்வின் போக்கில் உண்மைகளைக் கண்டு காட்டும் பண்பாடு ஆய்வறிஞனுக்கு வேண்டும். மரபுகளையும், நம்பிக்கைகளையும் உடைத்து மறு பரிசீலனை செய்யும் துணிபு ஆய்வாளன் நெஞ்சில் வேர்விடல் வேண்டும்.**

---

சிலப்பதிகாரத்தை ஆதாரமாகக் கொண்டு விடை காணப்பட வேண்டிய ஏராளமான வினாக்கள், இதுநாள் வரை ஏன் கேட்கப்படவில்லை? ஏன் பல வினாக்களுக்கு விடை காணும் முயற்சி மேற்கொள்ளப் பெற வில்லை என்பன புரியாத புதிர்களாகவே உள்ளன. சிலப்பதிகாரத்தை மையமாகக் கொண்டு நாம் சில வினாக்களைக் கேட்டுப் பார்ப்போம்.

மன்னர்களையும், வள்ளல்களையுமே பாடுபொருளாகக் கொண்டிருந்த கடைச் சங்ககாலப் புறஇலக்கிய மரபு



www.saivamonline.com

தகர்க்கப்பட்டு, ஒரு வணிகர்குலப் பெண்ணை, நாயகியாகக் கொண்டு, ஒரு பெருங்காப்பியம் பாடக்கூடிய சமூக மாற்றம் எப்படி நிகழ்ந்தது? கி.மு. ஐந்தாம் நூற்றாண்டு முதல் கி.பி. முதல் நூற்றாண்டு வரை மாறுபடாதிருந்த புற இலக்கிய மரபு, ஒரு நூற்றாண்டில் மாற்றங்கண்டதற்கான சமூக - அரசியல் - சமயப் பின்னணிகள் யாவை?

இளங்கோவின் கதைக்கரு, ஒரு சிறு சம்பவத்தின் மேல் பின்னப்பட்ட புனைதிறமா? முற்றான கற்பனையா? இல்லை: முழுமையான வரலாறா? மூவேந்தர்களோடும் தொடர்புடைய வரலாறு என்றால் சிலப்பதிகாரக் காலத்திற்குப் பிற்பட்ட

---

**கோவலனின் ஒழுக்கமின்மை நல்வினையாகப் போற்றப் பெற்று, இவ்வாறான ஆடவர் தவறுகளைக் கண்டிக்காத, போராடி மாற்றக் கருதாத பெண்மையின் இயலாமை நிலையே "கற்பு" எனச் சித்திரிக்கப்படுகிறதே, தொல்காப்பியமும் வள்ளுவமும் கூறும் கற்பிலக்கணம் இதுதானா? வேறா? வேறென்றால் கற்பென்பது காலத்திற்குக் காலம் மாறுபடும் தன்மையதா?**

---

மூவேந்தர் தொடர்புடைய இலக்கியங்களிலோ - கல்வெட்டுக்களிலோ சிலப்பதிகாரச் செய்திகள் ஏன் இடம் பெறவில்லை. சோழ - பாண்டியர்களுக்குக் கண்ணகி வரலாற்றைக் கூறிக் கொள்வது பெருமையாகாது என்றால், கோயில் கட்டிய சேரர்களாவது சிறப்பித்துப் பேசியிருக்கலாமே? ஏன் இல்லை?

இலக்கண உரைக்காரர்கள் - விளக்கத்திற்காக எடுத்துக் காட்டிய ஒரு சில வரிகளைத் தவிர, பின் வந்த ஏறத்தாழ ஆயிரத்து எழுநூறாண்டுக்கால இலக்கியங்களில் - சிலம்பின் கதையோ - பாத்திரங்களோ - பாடற்பகுதிகளோ நிறைவாக எடுத்துக் காட்டப்படாமைக்குக் காரணங்கள் யாவை?

சிலம்பில் பெண்மை உயர்த்தப்பட்டு - உன்னத நிலையில் வைக்கப்பட்டதே! சிலம்பின் தாக்கத்தால் தமிழகத்துப்





www.saivamonline.com

*பெண்மையின் வாழ்வியலில் புத்தொளி செழித்ததா? பெண்மையின் பெருமிதத்திற்கும் விடுதலைக்கும் அதனைத் தொடக்கமாகக் கொண்டு சமுதாயம் பெண் உயர்ச்சிக்கு வழி கண்டதா?*

*கோவலன் - குற்றமற்ற கண்ணகியை விட்டுப் பிரிகிறான். மாதவியை ஏலப் பொருளாக வீதியிலே வாங்கி உரிமை கொள்கிறான்! தென்றல் போலக் காமுகர்களோடு சுற்றித்திரிகிறான். மாதவியையும் சிறு சொற் கூறி ஏசிப்பிரிகிறான். அவன் ஒழுங்கீனமும் - கீழ்மையும் நன்கு புலனாகின்றன. ஆனால்,*

---

**ஒவ்வோர் இலக்கியம் பற்றிய ஆய்வும் மூன்று நிலைகளை உடையதாக அமைதல் வேண்டும். முதலாவதாக குறிப்பிட்ட ஓர் இலக்கியம் தோன்றுவதற்குக் காரணமான சமூகத் தாக்கம் விரிவாக ஆராயப்பட வேண்டும். இரண்டாவதாகக் குறிப்பிட்ட இலக்கியத்தின் படைப்பாளி சித்திரிக்கும் அல்லது காணவிழைந்த சமூகத்தை இனக்கண்டு காட்ட வேண்டும். மூன்றாவதாக ஓர் இலக்கியம் தோன்றிய காலத்திலும் அதன் பின்னரும், விளைந்த சமூக மாற்றத்தை மதிப்பிட்டு அறிய வேண்டும்.**

---

*மதுரைப் புறஞ்சேரியில் கண்ணகியோடு அவனைக் கண்ட, காப்பியத்தின் அறப்பாத்திரம் - மாடலன், 'இம்மைச் செய்தன யான் அறி நல்வினை' எனப் போற்றுமாறு இளங்கோ கதை நடத்துகின்றார். கோவலனின் ஒழுக்கமின்மை 'நல்வினை' யாகப் போற்றப் பெற்று, இவ்வாறான ஆடவர் தவறுகளைக் கண்டிக்காத - போராடி மாற்றக்கருதாத - பெண்மையின் இயலாமை நிலையே 'கற்பு' எனச் சித்திரிக்கப்படுகிறதே! தொல்காப்பியமும், வள்ளுவரும் கூறும் கற்பிலக்கணம் இதுதானா? வேறா? வேறென்றால் கற்பென்பது காலத்திற்குக் காலம் மாறுபடும் தன்மையதா?*



www.saivamonline.com

சிலம்பினை ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று என்று கூறுகின்றனரே! ஐம்பெருங்காப்பியம் என்ற குறியீடு எப்போது யாரால் வகுத்துரைக்கப்பட்டது? இவற்றுள் ஜைன - பௌத்தக் காப்பியங்கள் மட்டுமே இடம் பெற்றிருப்பது எதனால்? இத்தகு பகுப்பு எவ்வாறான அடிப்படையில் அமைந்திருந்தது? இவ்வாறான பகுப்பைப் போற்றுவதனால் தமிழ் இலக்கியங்களுக்கு வரும் புதிய சிறப்புக்கள் ஏதும் உண்டா? இப்பகுப்பில் சைவ - வைணவப் பெருங்காப்பியங்கள் இடம் பெறாமை ஏன்?

இவ்வாறு ஓர் இலக்கியத்தின் மேல் விடைகாணப்பட வேண்டிய முறையான வினாக்கள் பல உள்ளன.

நாம் மேற்கொள்ள வேண்டிய இலக்கியம் பற்றிய ஆய்வு - ஒவ்வோர் இலக்கியம் பற்றியும் மூன்று நிலைகளை உடையதாக அமைதல் வேண்டும்.

---

**கற்பனை இலக்கியங்களை மன மகிழ்ச்சிக்காகவும், சமுதாய இலக்கியங்களை ஒரு கால வாழ்வியலை அறியவும், அற இலக்கியங்களைச் சமுதாய மாற்றங்களுக்காகவும் இனங்கண்டு போற்றுதல் வேண்டும்.**

---

முதலாவதாக - குறிப்பிட்ட ஓர் இலக்கியம் தோன்றுவதற்குக் காரணமான சமூகத்தாக்கம் விரிவாக ஆராயப்பட வேண்டும்.

இரண்டாவதாக - குறிப்பிட்ட இலக்கியத்தின் படைப்பாளி சித்திரிக்கும் அல்லது காணவிழைந்த சமூகத்தை இனங்கண்டு காட்ட வேண்டும்.

மூன்றாவதாக ஓர் இலக்கியம் தோன்றிய காலத்திலும் அதன் பின்னரும், விளைந்த சமூக மாற்றத்தை மதிப்பிட்டு அறிய வேண்டும்.

உதாரணமாகப் பாரதி கவிதைகளை ஆராயப்புகுவோர், பாரதியைப் பாடத்தூண்டிய அடிமைக்கால சமூகப் பின்னணி, அவர் கவிதைகளில் காணப்படும் விடுதலை வேட்கை, பாரதியின் கவிதை விளைவித்த சமூக மாற்றம் என இம்முத்திறத்தையும் ஆராயவேண்டும். இவ்வாறு ஆராய்ந்தால்தான், பல இலக்கியம்



www.saivamonline.com

பற்றிய முறையான வினாக்களுக்கு விடை காண இயலும். இது நாள் வரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் முற்றாக இம்முயற்சிகள் மேற்கொள்ளப்பெறவில்லை.

நாம் மேலே கண்ட இம்முத்திற ஆய்வு கூட, எல்லா இலக்கியங்களுக்கும் பொருந்தி வரும் எனக்கூற இயலாது. சிலவகை இலக்கியங்கள், முன்தோன்றிய இலக்கியம் ஒன்றை அடியொற்றி எவ்விதச் சமுதாயத் தாக்கங்களுமின்றிப் படைப்பாளியின் விருப்பம் காரணமாகவே எழுந்துள்ளன. தமிழில் ஒரே காலத்தில் தோன்றிய சிலவகை சிற்றிலக்கியங்களை இவ்வகைக்கு எடுத்துக்காட்டலாம். வேறு சில வகை

---

**மற்றைய துறைகளில், முன்னைய முடிபுகளை மறுபரிசீலனை செய்யும் தமிழ் மக்கள், இலக்கியத் துறையில் ஒரு காலத்தில் காணப்பட்ட முடிபை மறுபரிசீலனை செய்ய முற்படாது, அப்படியே ஏற்கத் துணிவது வியப்பைத் தருகிறது.**

---

இலக்கியங்களுக்குக் குறிப்பிட்டுக் கூறும் படியான சமுதாய நோக்கங்கள் ஏதும் இல்லாதிருப்பதும் உண்டு. மூன்றாவதாகப் பெரும்பாலான இலக்கியங்கள் பெரிய சமூகத்தாக்கத்தை விளைவித்திருப்பதாகவும் கூற இயலாது. எனவே, இவ்வகை ஆய்வைக் குறிப்பிட்ட சில மூல இலக்கியங்களின் மேல் கொள்வதே பொருத்தமானது.

அடுத்து, இலக்கியங்களின் சமுதாயத்தாக்கங்கள் குறித்து வேறு சில அடிப்படைகளையும் நாம் சிந்திக்க வேண்டும். சங்க கால இலக்கியங்களைப் பொறுத்தவரை அவற்றிடையே மூன்று வேறுபட்ட நிலைகள் காணப்படுகின்றன. ஒன்று: கற்பனை இலக்கியங்கள்: இவை உலகியல் கூறுகளை ஓரளவு உள்ளடக்கிப் பெரும்பாலும் நாடக வழக்கில் புனைந்துரையாகப் பாடப்பெற்றன. தமிழில் சங்க கால அக இலக்கியங்களை இவ்வகையில் அடக்கலாம். இரண்டாம் வகை: சமுதாய இலக்கியங்கள். இவை நன்மை - தீமைகள் எவை எவை என ஆராயாது, சமூக விழைவுகளையும், நடைமுறைகளையும் ஒளிவு மறைவின்றி அப்பட்டமாகக் கூறுவன. சங்ககாலப் புற



www.saivamonline.com

இலக்கியங்களை இவ்வகையில் அடக்கலாம். மூன்றாவது வகை இலக்கியங்கள் சமுதாய விழைவுகளையும் நடைமுறைகளையும் அப்படியே ஏற்காது, நல்லனவற்றை ஏற்று, அல்லனவற்றைக் கடுமையாகச்சாடும் தன்மையன. திருக்குறள் முதலாய அற இலக்கியங்கள் இவ்வகையின. 'சிறியகள் பெறினே எமக்கீயும் மன்னே' என அவ்வையார் பாடிய அதே காலத்தில்தான் 'உண்ணற்க கள்ளை' என்று கூறிய திருக்குறளும் தோற்றம்கொண்டுள்ளது. எனவே, கற்பனை இலக்கியங்களை மன மகிழ்ச்சிக்காகவும். சமுதாய இலக்கியங்களை ஒரு கால

---

**புறப்பாடல்கள் மாமன்னர்களுக்கும், கற்றறிந்த புலவர்களுக்கும் இடையே நிலவிய உறவில் மலர்ந்தன. ஒரு சமூக வாழ்வை, அதன் தன்மைகளை, மக்கள் வளத்தைக் குறிப்பிட்ட இருசாராருக்கும் இடையே நிலவிய உறவில் எழுந்த பாடல்களைத் துணைக் கொண்டு ஆராய்ந்து மதிப்பிடுவதும், அதன் அடிப்படையில் ஒரு சமூக வாழ்வை உன்னதமானது எனச் சான்றளிப்பதும் எவ்வகையில் நிரம்பும் என்பது புலனாகவில்லை.**

---

வாழ்வியலை அறியவும், அற இலக்கியங்களைச் சமுதாய மாற்றங்களுக்காகவும் இனங்கண்டு போற்றுதல் வேண்டும்.

இவ்வகைப் பகுப்புக்களை நினைவிற் கொண்ட பின்னர், காலவாரியாக இலக்கியங்களில் விடை தேட வேண்டிய வினாக்கள் சிலவற்றை முறையே நினைவு கூரலாம்.

'சங்க காலம் தமிழர் வாழ்வின் பொற்காலம்' என்பது இலக்கிய வரலாறு எழுதிய பலருக்கும் உடன்பாடான ஒன்று.வாழும் இலக்கியவாதிகளும், மேடைப்பேச்சாளர்களும், அரசியல் சார்புடையோரும் கூட, சங்க காலம் தமிழர் வாழ்வின் பொற்காலம் என்றே கூறி வருகின்றனர். இவர்கள் கூற்று, சங்க இலக்கியங்கள் சித்திரிக்கும் சமுதாய வாழ்வை, மேலெழுந்த



www.saivamonline.com

வாரியாக மதிப்பிட்ட சிலரது எண்ணங்களை அப்படியே ஏற்று வழிமொழியும் பாங்கில் அமைந்துள்ளது. மற்றைய துறைகளில் முன்னைய முடிபுகளை மறுபரிசீலனை செய்யும் தமிழ் மக்கள், இலக்கியத்துறையில் ஒரு காலத்தில் காணப்பட்ட முடிபை மறுபரிசீலனை செய்ய முற்படாது, அப்படியே ஏற்கத் துணிவது வியப்பைத் தருகிறது.

உண்மையிலேயே சங்க காலம் தமிழர் வாழ்வின் பொற்காலந் தானா?

இலக்கியத்தில், மறுபரிசீலனை செய்து, விடை தேடிப் பார்க்கலாம்.

கி.மு. ஐந்தாம் நூற்றாண்டுக்கும் கி.பி. முதல் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட அறுநூறு ஆண்டுக்காலப் பகுதியையே கடைச் சங்க காலம் என மு. வரதராசனார் குறிப்பிடுகிறார்.

---

**கொடை மிகுத்துக் கூறப்பட்ட சமுதாயத்தில் வறுமை மிகுந்திருந்தது என்பது தானே நடைமுறை உண்மையாகும். போர் மிகுதி கூறப்பட்ட சமுதாயத்தில் இளைய வீரர்கள் கூட்டம் கூட்டமாக மடிய நேர்ந்த உண்மையை எவ்வாறு மறுக்கக்கூடும். ஒரே மொழி பேசும் தமிழ் மன்னர்களின் இடையே சிறு சிறு காரணங்களுக்காக நிகழ்ந்த போராட்டத்தில் நம்மவர்கள் நிகழ்த்திய சாகசங்கள் தாமே இங்கே வீரமாக சித்திரிக்கப் பெற்றன.**

---

இக்காலப் பகுதியில் தோன்றிய இலக்கியங்கள் பத்துப்பாட்டும், எட்டுத்தொகையும், பதினெண்கீழ்க் கணக்கில் களவழி நாற்பது - திருக்குறள் முதலியனவுமாகும்.

இவற்றுள் அக இலக்கியங்கள் யாவும் நாடக வழக்கிலும், உலகியல் வழக்கிலும் அமைந்த கவிஞர்களின் பாடல் சார்ந்த புலனெறி வழக்கின; 'இல்லது இனியது நல்லது' எனப் புலவர்களால் நாட்டிக் கொள்ளப் பெற்றன. இவற்றில், சில மன



www.saivamonline.com

உணர்வுகள் மட்டுமே வாழ்வாகக் கொள்ளத்தக்கன. நச்சினார்க்கினியரும், வாழும் சில பேராசிரியர்களும் எண்ணுவது போல, அக இலக்கியங்களை உண்மை வாழ்வாகக் கொண்டால் - திருமணத்திற்கு முற்பட்ட உடல் உறவுச் சித்திரிப்பு, பரத்தையிற் பிரிவு - கலித் தொகையின் முல்லைக்கலி காட்டும் சில கைக்கிளை உறவுகள் முதலியன சங்க கால மக்கள் வாழ்வை உயர்த்திக் காட்ட உதவுவனவாக அமையா.

திருக்குறள் முதலாய அற இலக்கியங்கள், சங்க கால மக்கள் வாழ்வைத் தீரமாகக் கண்டிக்கக்காண்கின்றோம். குறிப்பாகக் கள்ளுண்டல் - புலால் புசித்தல் - பரத்தமை வாழ்வு, வரைவின் மகளிர் முதலாய சமூகத் தீமைகளை இவை கண்டிக்கின்றன.

---

**வள்ளுவர் கூறிய அன்பும், செய்ந்நன்றியும், நடுவு நிலைமையும், ஒழுக்கமும், இன்று நம்மிடையே வாழ்வாக மலர்ந்தனவா? ஒருவர் நெறியை ஏற்காது, அவரைப் போற்றி விழா எடுப்பது முரண்பாடல்லவா? திருக்குறளுக்கே இந்தக் கதி என்றால் ஏனைய இலக்கியங்களுக்குத் தமிழ் மக்கள் தரும் மரியாதை எத்தகையதாக இருக்கும்.**

---

இவ்விருவகை இலக்கியங்களையும் நீக்கிவிட்டால் சங்க காலச்சமுதாயத்தை, எஞ்சிய சில புற இலக்கியங்கள் வாயிலாகவே மதிப்பிட இயல்கின்றது. இவ்வகை இலக்கியங்கள் சுட்டும் சமூக வாழ்வை மதிப்பிட்டே சங்ககாலம் ஒரு பொற்காலம் எனச் சுட்டப்பட்டு வருகிறது.

புற இலக்கியங்களின் அமைப்பைச் சற்று நோக்கலாம். இவை பெரும்பாலும் கற்றறிந்த - அறிவாற்றல் நிரம்பிய வறுமையில் வாடிய புலவர்கள் - மன்னர்களையும் வள்ளல்களையும் - பரிசில் வேண்டிப் பாடியனவாகவே காணப்படுகின்றன. மிகச் சிலபாடல்களே வேறு நோக்கில் அமைந்தன.

இப்பாடல்களின் உள்ளீடுகள் யாவை? மன்னவன் போர்க்களத்தில் பெற்ற வெற்றி - பகையழித்த வீரம் - கொள்ளை



www.saivamonline.com

கொண்ட பொருட்கள் - பகை மன்னர் தேய்வு - இவை வீரமாகச் சித்திரிக்கப்பட்டன. மக்களின் வறுமை - கவிஞர்களின் இல்லாமை - கலைஞர்களின் துயரம் - இவற்றை நீக்கப் பகைப் புலத்தில் கொண்ட பொருள்களை எண்ணாது வழங்கும் மன்னன் திறம் கொடையாகச் சித்திரிக்கப் பெற்றன. இவ்விருதிறமும் பற்றி வந்த புகழ், பலப்படப்பாராட்டப்பெற்றது. எனவே, புறப்பாடல்கள் மாமன்னர்களுக்கும், கற்றறிந்த புலவர்களுக்கும் இடையே நிலவிய உறவில் மலர்ந்தன. ஒரு சமூக வாழ்வை - அதன் தன்மைகளை-மக்கள் வளத்தை - குறிப்பிட்ட இருசாராருக்கும் இடையே நிலவிய உறவில் எழுந்த பாடல்களைத் துணைக் கொண்டு ஆராய்ந்து மதிப்பிடுவதும் - அதன் அடிப்படையில் ஒரு சமூக வாழ்வை - உன்னதமானது எனச் சான்றளிப்பதும் எவ்வகையில் நிரம்பும் என்பது புலனாகவில்லை.

---

**இரண்டாயிரம் ஆண்டுக் காலமாகத் தமிழ்ச் சமுதாயத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏதும் நிகழவில்லையே, எல்லாவற்றையுமே பொழுது போக்கிற்கும் சுவைத்து மகிழ்வதற்குமென்றே கருதும் தமிழ் மக்களின் மனோபாவமே இலக்கியங்கள் இங்கே தோற்றுப் போனதற்குக் காரணங்களா?**

---

மன்னர்களுக்கும் - புலவர்களுக்கும் இடையில் நிலவிய உறவே ஒரு சமூகச் சித்திரமாகிவிட முடியாது. இவ்விரு சாரரையும் கடந்து வாழும் மக்கள் சமுதாயம் மிகப் பெரியது. அந்தச் சமுதாயத்தின் தேவை, வளம், கல்வி, விருப்பங்கள், வாழ்வியல், தொழில்முறை, சமூக நாட்டங்கள் முதலாய பலவற்றைப் பற்றி ஏதுமே அறியாத நிலையில் ஒரு காலச் சமுதாயத்தைப் பொற்காலம் எனப் போற்றியது எவ்வாறு?

கற்றறிந்த சான்றோர்களும், கலைவல்லாரும் தடையின்றி மன்னனைக் காணும் வாய்ப்பினைப் பெற்றவர்கள். அவர்களே வறுமையின் எல்லையில் நின்றதைச் சங்க இலக்கியங்கள் சுட்டுகின்றன. இவர்கள் நிலையே இதுவானால் கல்வியறிவற்ற - பாமரமக்களின் வாழ்வு எப்படிப்பட்டதாக இருந்திருக்கும்?



www.saivamonline.com

கொடை மிகுத்துக் கூறப்பட்ட சமுதாயத்தில் வறுமை மிகுந்திருந்தது என்பது தானே நடைமுறை உண்மையாகும். போர் மிகுதி கூறப்பட்ட சமுதாயத்தில் இளைய வீரர்கள், கூட்டம்,கூட்டமாக மடிய நேர்ந்த உண்மையை எவ்வாறு மறுக்கக்கூடும். ஒரே மொழி பேசும் தமிழ் மன்னர்களின் இடையே - சிறு சிறு காரணங்களுக்காக நிகழ்ந்த போராட்டத்தில் நம்மவர்கள் நிகழ்த்திய சாகசங்கள் தாமே இங்கே வீரமாக சித்திரிக்கப் பெற்றன. மன்னர்கள் செஞ்சோறு வழங்குதலும் - செஞ்சோற்றுக் கடன் கழிக்க வீரர்கள் போர்க்களத்தில் உயிர் துறத்தலும் - போர்க்களத்தில் உயிர் விட்ட வீரர்கள் 'வலவன் ஏவாவான ஊர்தி' ஏறி விண்புகுவர்: அங்கே வான்அற மகளிர் வீரர்களை எதிர்கொண்டு அணைப்பர் என்றும் புலவர்கள் பாடியதன் உள்நோக்கம் என்ன? இந்த வினாக்களுக்குப் பதற்றப் படாமல் விடை காணும்போது நாம் நமது சங்ககாலம் பற்றிய மதிப்பீட்டை மாற்றிக் கொள்ளவே வேண்டியிருக்கும்.

---

**தமிழ்ப் பெருங்கவிஞர்கள் பலரும் தங்கள் பெருங் காப்பியத்திற்கு உரிய கருவைத் தமிழ் மண்ணிலிருந்து தேர்ந்து கொள்ளாமல், பிற மண்ணில் நிகழ்ந்த கதைகளையே தம் காப்பியத்திற்குத் தேர்ந்து கொண்டமை எதனால்.?**

---

அடுத்து, அற இலக்கியங்களில் தலையாயதாகிய திருக்குறள் நமது எண்ணத்திற்கு வருகிறது. தோன்றிய காலத்திலும், அதற்குப் பின்னும் பல்வேறு பாராட்டுரைகளை அணியாகப் பெற்ற சிறப்பு இதற்கு உண்டு. இன்று வரை தமிழர்களால் ஒரு மனதாக மதித்துப் போற்றப்பட்டு வருகிறது. உலகின் பல மொழிகளிலும் மொழி பெயர்க்கப் பெற்ற சிறப்பினது. 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ் நாடு' எனப் பாரதியாரால் பாராட்டப் பெற்றது. இதன் சொற்களும், சொற்றொடர்களும் பின் வந்த கவிஞர்களால் பெரிதும் போற்றி ஏற்கப் பெற்றன. ஒப்புயர்வற்ற திருக்குறள் மேல் சில நியாயமான வினாக்கள் நம்முள் எழுகின்றன.

கவிஞனையும், கவிஞனின் படைப்பையும் பெரிதும் போற்றிப் பாராட்டும் தமிழ் மக்கள், கவிஞன் காட்டிய அறநெறிக்



www.saivamonline.com

கோட்பாடுகளை இதுநாள் வரை வாழ்வில் ஏற்றுப் போற்றாமை எதனால்?

ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளில் எந்த ஒரு மன்னனும் அல்லது தமிழ் நாட்டு அரசும் வள்ளுவத்தை வாழ்க்கையோடு இணைக்க முயற்சி மேற்கொள்ளாமைக்குக் காரணங்கள் யாவை?

திருக்குறள் சுவை உணர்விற்குத் தீனிபோடும் கற்பனை அல்லவே! அப்பட்டமான அறவாழ்வின் வழி காட்டியாயிற்றே! திருவள்ளுவர் காட்டிய தனி மனித அறங்களோ சமுதாய அறங்களோ ஏன் தமிழ் மக்களால் பின்பற்றப்படவில்லை?

பின்பற்றத்தக்க எளிமை திருக்குறளில் இல்லையா? ஏற்றுப் போற்றும் எண்ணம் நம்மவர்களுக்கு இல்லையா? மதிக்கப்படும் - ஒன்று பின்பற்றத்தக்கதாகக் கருதப்படாமை எதனால்?

---

**இருபதாம் நூற்றாண்டில் வரலாற்றுப் பின்னணியோடு ஒரு ''பார்த்திபன் கனவும், பொன்னியின் செல்வனும், வேங்கையின் மைந்தனும் உரைநடைக் காப்பியங்களாக பண்டை வரலாற்று நிகழ்வுகளின் மேல் புனையப்படக் கூடுமாயின், நமது காப்பியக் கவிஞர்களை அவை கவராமைக்கு எவை காரணங்கள்?**

---

தமிழ் இலக்கியங்கள் எல்லாமே - தமிழ் மக்களின் இன்பியல் இரசனைகளுக்கு மட்டும் தானா? அப்படியென்றால் தமிழ் இலக்கியங்களுக்குச் சமூகத்தாக்கத்தைத் தோற்றுவிக்கும் ஆற்றல் இல்லை என்பதுதானே பொருள்.

வள்ளுவர் கூறிய அன்பும், செய்ந்நன்றியும், நடுவு நிலைமையும், ஒழுக்கமும் இன்று நம்மிடையே வாழ்வாக மலர்ந்தனவா? ஒருவர் நெறியை ஏற்காது, அவரைப் போற்றி விழா எடுப்பது முரண்பாடல்லவா? திருக்குறளுக்கே இந்தக் கதி என்றால் ஏனைய இலக்கியங்களுக்குத் தமிழ் மக்கள் தரும் மரியாதை எத்தகையதாக இருக்கும்?

வினாக்களை அடுக்கிக் கொண்டே போவதில் பயனில்லை.



www.saivamonline.com

விடையைத் திருக்குறளில் தேடுவதா? தமிழர் வாழ்வியலில் தேடுவதா?

சான்றோர் எண்ணங்களும், எழுத்துக்களும், இலக்கியங்களும் சமூக மாற்றங்களை விளைவித்திருப்பதை மேலை நாடுகளின் வரலாறுகள் எடுத்துக் காட்டுகின்றன. இரண்டாயிரம் ஆண்டுக் காலமாகத் தமிழ்ச் சமுதாயத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏதும் நிகழவில்லையே! எல்லாவற்றையுமே - பொழுது போக்கிற்கும் - சுவைத்து மகிழ்வதற்குமென்றே கருதும் தமிழ் மக்களின் மனோபாவமே இலக்கியங்கள் இங்கே தோற்றுப் போனதற்குக் காரணங்களா?

ஆழமாக நாம் சிந்திக்க வேண்டிய நேரம் இது! சிந்தித்து உரிய விடை காண வேண்டும்.

---

**பெருங்காப்பியங்கள் தாய்மொழிக்கு அணி சேர்க்கப் பாடப்பெற்றனவா? அன்றிக் கவிஞர்கள் தாம் சார்ந்திருந்த சமய ஏற்றத்திற்காக மொழியைப் பயன் கொண்டனரா? நோக்கமே வேறானால் நமது காப்பியங்களைச் சமய வரலாற்றில் வைத்து ஆராய்வதா? தமிழ் இலக்கிய வரலாற்றில் வைத்து ஆராய்வதா?**

---

காப்பியங்களின் வரலாற்றை உற்று நோக்கும் போது இனங்காண மாட்டாத சோகம் ஒன்று நம்முள் எழுகிறது. சிலம்பும் - மேகலையும் தோன்றிய காலத்திற்குப் பின்னர், ஏறத்தாழ ஆயிரத்து அறுநூறு ஆண்டுக்கால வரலாற்றில் தமிழில் தோன்றிய பெருங்காப்பியங்கள் நம்முன் நிழலாடுகின்றன. தகுதிமிக்க கவிவாணர்களால் படைக்கப் பெற்ற ஏறத்தாழ ஒரு பத்து நூல்கள் பெருங் காப்பியங்களாகக் கருதத்தக்கன.

நமது உள்ளத்தில் காப்பியம் பற்றிய எழும் வினாக்கள் ஆழமான சிந்தனைக்குரியன.

தமிழ்ப் பெருங்கவிஞர்கள் பலரும் தங்கள் பெருங் காப்பியத்திற்கு உரிய கருவைத் தமிழ் மண்ணிலிருந்து தேர்ந்து கொள்ளாமல், பிற மண்ணில் நிகழ்ந்த கதைகளையே தம் காப்பியத்திற்குத்தேர்ந்து கொண்டமை எதனால்?



www.saivamonline.com

ஒரு பெருங்காப்பியம் புனைவதற்குரிய கதைக் கருவே ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகளில் தமிழகத்தில் தோன்ற வில்லையா? மாமன்னர் நிகழ்த்திய வீரங்களோ, தனி மனிதர்களின் வீர வாழ்வோ, காப்பியப் புனைவுக்கு ஏற்ற கருவன்று எனக் கவிஞர்கள் கருதினார்களா? இருபதாம் நூற்றாண்டில் வரலாற்றுப் பின்னணியோடு ஒரு 'பார்த்திபன் கனவும்', 'பொன்னியின் செல்வனும்', 'வேங்கையின் மைந்தனும்' உரை நடைக் காப்பியங்களாகப் பண்டை வரலாற்று நிகழ்வுகளின் மேல் புனையப்படக் கூடுமாயின், நமது காப்பியக் கவிஞர்களை அவை கவராமைக்கு எவை காரணங்கள்?

சீவகன் கதையும், உதயணன் வரலாறும், இராமன் சரிதமும் இந்த மண்ணின் மரபுகளோடு முரண்படும் என்று அறிந்தும், முயன்று அவற்றைக் காப்பியங்களாக்கிய நம் கவிஞர்களுக்குத் தமிழ் மண்ணில் ஒரு காப்பியக் கருவைத் தேர்ந்து கொள்ள எவை எவை தடையாக அமைந்தன?

---

**இத்தகு வினாக்களின் பின்னணியில், தமிழ் மொழி, சமயவாதிகளின் எண்ணங்களைத் தாங்கிச் சுமந்ததே அன்றித் தமிழ் மொழியைத் தாங்கிச் சுமந்தார் எவரும் இலர் என்ற விடை தொனிப்பது உண்மையா?**

---

இங்கே பெருங்காப்பியங்கள் தாய்மொழிக்கு அணி சேர்க்கப் பாடப்பெற்றனவா? அன்றிக் கவிஞர்கள் தாம் சார்ந்திருந்த சமய ஏற்றத்திற்காக மொழியைப் பயன்கொண்டனரா? நோக்கமே வேறானால் - நமது காப்பியங்களைச் சமய வரலாற்றில் வைத்து ஆராய்வதா? தமிழ் இலக்கிய வரலாற்றில் வைத்து ஆராய்வதா?

மேலை நாட்டுப் பெருங்காப்பியங்கள் பலவும் தத்தம் மண்ணின் மைந்தர்கள் மேல் பாடப்பட்டிருக்கத் தமிழ்க் காப்பியங்கள் பலவும் இரவல் கதைகளாக அமைந்திருப்பதற்கு வேறு ஏதும் காரணங்கள் உளவா? மொழியை விட - நாட்டை விட - சார்ந்திருக்கும் சமயம் பெரிது என்ற கருத்திற்கும் இதற்கும் தொடர்புண்டா?

சங்க காலம் வரையில் கவிதையின் பாடு பொருளாக இருந்த மனிதன் பின்னுக்குத் தள்ளப்பெற்று, இறையவர்கள் தமிழ்க்



www.saivamonline.com

கவிதைகளின் பாடு பொருளாக மாறிய மாற்றத்தின் விளைவுகளுக்கும், நமது பெருங்காப்பியக் கதைக் கருத்தேர்வுகளுக்கும் தொடர்புண்டா? மனிதன் மேல் காப்பியம் பாடுவதா? அப்படியே பாட நேர்ந்தாலும் அவனை இறைவன் அவதாரமாகவே காட்டுவோம் என்ற நோக்கம் காப்பியக் கவிஞர்களுக்கு இருந்திருக்கக் கூடுமோ?

இத்தகு வினாக்களின் பின்னணியில், தமிழ் மொழி, சமயவாதிகளின் எண்ணங்களைத் தாங்கிச் சுமந்ததே அன்றித் தமிழ் மொழியைத் தாங்கிச் சுமந்தார் எவரும் இலர் என்ற விடை தொனிப்பது உண்மையா? நமது நெஞ்சம் கனப்பது தெரிகிறது.

கி.பி. ஏழாம் நூற்றாண்டுத் தொடங்கி, தமிழ் இலக்கிய வரலாற்றில் வைதீக சமயங்களின் செல்வாக்கு மிகலாயிற்று. சைவமும், வைணவமும் மாபெரும் வளர்ச்சி பெற்றன.

---

**இறைவன் திருவடிகளில் அன்பினை உருவாக்க முடிந்த இந்த இலக்கியங்களுக்கு, அண்டையில் வாழும் மனிதன் ஒருவனை அன்பு செய்து நேசிக்கும் பண்பினை உருவாக்க இயலாமல் போனது ஏன்? நந்தனாரை நாயன்மாராகத் திருக்கோயிலுக்குள் எழுந்தருளிவித்த பின்னரும் அவர் மரபினரைக் காந்தியடிகள் காலம் வரைத் திருக்கோயில் வழிபாட்டுக்கு அனுமதிக்காமை எவ்வாறு நிகழ்ந்தது?**

---

மாமன்னர்களும், மக்களும் வைதீக சமயங்களுக்கு மீண்டனர். பல்லவர்களும், பிற்காலச் சோழர்களும் சைவ, வைணவ எழுச்சிக்குத் துணை நின்றனர். ஏறத்தாழ ஐந்நூறு ஆண்டுக்காலத்தில் எண்ணிலா சமய இலக்கியங்கள் தோன்றின. சைவத்தில் பன்னிரு திருமுறைகள் தொகுக்கப் பெற்றன. வைணவத்தில் நாலாயிரத்திவ்யப் பிரபந்தம் தொகுக்கப் பெற்றது. சமயங்களின் துணையோடு, தமிழ் இசையும், பிற நுண்கலைகளும் வளர்ந்தன. திருக்கோயில் வழிபாடும், தோத்திர நெறியும் சிறந்தன. இறைவன் திருமுன்பு அனைவரும் சமமானவர்களே. மனித



www.saivamonline.com

குலத்தில் பிறந்தார் அனைவரும் சாதிபேதம், ஏற்றத் தாழ்வுகள் கருதாது ஒன்றாகக் கருதிப் போற்றத்தக்கவர்களே என்பன போன்ற உயர் கோட்பாடுகளைச் சமய ஆசாரியர்கள் எடுத்துரைத்தனர்.

தேவாரங்களுக்கு இசை அமைத்தார் தாழ்த்தப்பட்ட குலமாகக் கருதப்பெற்ற ஒரு குடியில் வந்த திருநீலகண்ட யாழ்ப்பாணரே! திருநீலநக்கராகிய அந்தணர் இல்லத்தில் பாணனாரும், துணைவியாரும், வேள்விக் கூடத்தில் இரவில் தங்க அனுமதிக்கப் பெற்றனர். திருநாளைப் போவாராகிய நந்தனாரைத் தில்லை வாழ் அந்தணர்கள் ஏற்றுப் போற்றி நடராசப் பெருமானைத் தரிசிக்கச் செய்தனர். நாயன்மார்களின் திருமேனிகள் சிவாலயங்களுக்குள் எழுந்தருள்விக்கப்பெற்றன. அங்கம் குறைந்த தொழுநோயராய், ஆ உரித்துத் தின்னும் புலையர்களும் - சிவனுக்கு முன்னே வணங்கத்தக்கவர்கள் என்று திருநாவுக்கரசர் பாடினார். சாத்திரம் பயின்றும், கோத்திரம் குலம் என்று பேதப்படுத்துவோர் கண்டிக்கப் பெற்றனர். சுந்தரமூர்த்திகள் திருவாரூரில் ஒரு கணிகையர் குலப் பெண்ணை விரும்பி மணந்தார். பெருமிதப்படத்

---

**சமயம், கடவுள், அருளாளர் இவர்கள் எல்லோரையும் விடப் பிறப்பு வழி வந்த சாதியே பெரிதென்று கருதும் ஓர் இனமே தமிழ் இனம். இலக்கிய வாதிகளும், அற நூலாசிரியர்களும் தோற்ற அதே இடத்தில் சமயச் சான்றோர்களும் தோற்றுவிட்டதாகத்தானே பொருள் கொள்ள வேண்டும்.**

---

தக்க ஒரு சமத்துவ சமுதாயத்தைச் சமயவாதிகள் விரும்பியிருந்தமை புலனாகிறது.

பிற இலக்கியங்களை எல்லாம் விடச் சமய இலக்கியங்கள் மக்கள் மேல் தாக்கங்களை விளைவித்துள்ளன.

நாயன்மார்களையும், ஆழ்வார்களையும் போற்றித் துதித்தும், அவர்கள் அருளிய பாமாலைகளைக் கண்ணீர் அரும்ப ஓதிக் கசிந்தும், அவர்கள் காட்டிய நெறி நின்றால் இறைவனை அடையலாம் என்று நம்பியும் வாழ்ந்த தமிழ் மக்கள், அவர்கள் வெறுத்து ஒதுக்கிய சாதி பேதங்களை ஏற்க மறுத்தது எதனால்?



www.saivamonline.com

இறைவன் திருவடிகளில் அன்பினை உருவாக்க முடிந்த இந்த இலக்கியங்களுக்கு, அண்டையில் வாழும் மனிதன் ஒருவனை அன்பு செய்து நேசிக்கும் பண்பினை உருவாக்க இயலாமல் போனது ஏன்? நந்தனாரை நாயன்மாராகத் திருக்கோயிலுக்குள் எழுந்தருள்வித்த பின்னரும் - அவர் மரபினரைக் காந்தியடிகள் காலம் வரை, திருக்கோயில் வழிபாட்டுக்கு அனுமதிக்காமை எவ்வாறு நிகழ்ந்தது? இன்று வரை சமயத்தின் பேரால் கூட, மனித இன பேதங்களை மாற்ற இயலாமல் இருப்பது எதனால்?

சமயம், கடவுள், அருளாளர் - இவர்கள் எல்லாரையும் விடப் பிறப்பு வழி வந்த சாதியே பெரிதென்று கருதும் ஒரு இனமா தமிழ்இனம்? இலக்கிய வாதிகளும், அற நூலாசிரியர்களும் தோற்ற அதே இடத்தில் சமயச்சான்றோர்களும் தோற்றுவிட்டதாகத்தானே பொருள் கொள்ள வேண்டும். புரியாத புதிராகத் தமிழ் மக்களின் நடைமுறை வாழ்வு திகைப்பூட்டுகின்றது.

---

**மூவரும் சேர்ந்து எப்படித் திருமுறை ஏடுகள் இருந்த அறைக்குத் திருக்காப்பிட்டிருக்க முடியும். காலம் வேறாயிற்றே. அங்ஙனமிருந்தாலும் மூவரும் ஒரு சேர மீண்டும் வருதல் எவ்வாறு? தமிழ்ப் பாமாலை ஏடுகளை நாடாளும் மன்னன் வேண்டிய பொழுதும் கூடத் தர மறுத்த காரணங்களைக் கற்பித்தாரின் உள்நோக்கம் யாதாக இருந்திருக்கும்.**

---

பட்டினத்தாரும், தாயுமானாரும், சித்தர்களும் இராமலிங்க அடிகளாரும் நம்மைப் பார்த்து நகைப்பது போல் தோன்றுகின்றது.

மதம், சாதி ஆகிய கட்டுக்கள் ஒரு புறமிருக்க மொழி வழி பேதங்களும் நமது தமிழ் இலக்கிய வாழ்விற்கு ஊறுவிளைத்து வந்துள்ளன.

தில்லையில் நடராசப் பெருமானின் கருவறை அருகில், ஓர் அறையில் மூவர் தேவாரம் இருப்பதாக அறிந்த சோழப் பேரரசன்,



www.saivamonline.com

அதனை எடுத்துத் தொகுக்க முயன்ற கதையைத் திருமுறை கண்ட புராணம் விரிக்கிறது.

மன்னன் அவற்றை எடுக்க அனுமதி வேண்டிய போது தில்லை மறையவர்கள் மறுப்புக் கூறுகின்றார்கள்.

மூவர் கையடையாளமிட்டுத் திருக்காப்பிடப் பெற்ற இவ்வறையை, மூவரும் வந்தால்தான் திறக்கமுடியும் என அவர்கள் கூறியதாகப் புராணம் கூறுகிறது. மூவரும் சேர்ந்து எப்படித் திருமுறை ஏடுகள் இருந்த அறைக்குத் திருக்காப்பிட்டிருக்க முடியும்! காலம் வேறாயிற்றே! அங்ஙனமிருந்தாலும் மூவரும் ஒரு சேர மீண்டும் வருதல் எவ்வாறு? தமிழ்ப் பாமாலை ஏடுகளை - நாடாளும் மன்னன் வேண்டிய பொழுதும்கூடத்தர மறுத்த காரணங்களைக் கற்பித்தாரின் உள்நோக்கம் யாதாக இருந்திருக்கும். உமாபதியார் வரலாறு புனைகதையா! உண்மையா! தில்லை மறையவர் வழி வந்த உமாபதியார் அப்படி ஒரு பொய்க்கதையை எழுதத்துணிவரா?

**கம்பனின் இராமாவதார அரங்கேற்றத்திற்கு வைணவத் திருக்கோயில்களிலேயே வாய்ப்பளிக்க மறுப்புத் தெரிவிக்கப் பட்டதாகக் கூறப்படுகிறதே. இம்மறுப்பின் பின்னணியில் வருணாசிரம ஜாதீயக் காரணங்கள் ஏதும் இருந்திருக்கக் கூடுமோ?**

தமிழ் வேதங்களாகப் போற்றப்பெறும் மூவர் தேவாரம் வெளிப்படுவதில் பூசிக்கும் மறையவர்கள் தடைபயக்க மொழி சார்ந்த காரணங்கள் இருக்கக்கூடுமோ? இதே போல் வேறு எத்தனையோ திருக்கோயில்களில் தமிழ் ஏடுகள் இருந்திருக்கக் கூடுமே! இவ்வாறான சிலரது மறுப்புக்களால் அவை வெளிப்படுத்தப்படாது அழிந்தனவா? இத்தகு செய்திகளை ஒரு சாதாரண நிகழ்வுகளாகப் படிக்கிறோமே அன்றி, உணர்வு பூர்வமாகக்காண நாம் ஏன் முற்படுவதில்லை? புரியாத புதிர்கள் பல இனங் காணப்படாதே நிற்பது தெரிகிறது.

இனி பிற்காலச்சோழர் ஆட்சிக்காலத்தில் எழுந்த கம்பனின் இராமகாதை பற்றிச் சில வினாக்களை நெஞ்சிற்குக் கொண்டு வருவோம்.



www.saivamonline.com

கி.பி. ஏழாம் நூற்றாண்டுத் தொடங்கி வளர்ந்து வந்த வைணவ இலக்கியங்கள் பலவும், திருமாலின் தசாவதாரங்களைப் பலபடப் புகழ்ந்து மகிழ்ந்தன. சிறப்பாக நாலாயிரத் திவ்யப்பிரபந்தம் தசாவதாரங்களுள் கிருஷ்ணாவதாரத்தையே பெரிதும் சிறப்பித்து நின்றது. ஆழ்வார்கள் அனைவருமே கிருஷ்ணாவதாரத்தைப் போற்றிப் பாடியுள்ளனர். ஆனால் இராமாவதாரம் இவர்களுள் பலரால் பாடப்பெறவே இல்லை. ஒரு சிலர் மட்டுமே இராமாவதாரத்தைப் பாடினர். அவர்களும் கிருஷ்ணாவதாரத்தைச் சிறப்பித்த அளவு இராமாவதாரத்தைச் சிறப்பித்துப் பாடிடவில்லை. இதே காலப்பகுதியில் கவிஞர்கள் சிலர் கிருஷ்ணாவதாரத்தோடு தொடர்புடைய மகாபாரதக் கதையைச் சிறு சிறு இலக்கியங்களாகப் பாடியிருந்தனர் எனவும் தெரிகிறது.

ஆழ்வார்களின் தாக்கம் கம்பனில் காணப்படுகிறது என்பர் ஆய்வாளர். கம்பன் ஆழ்வார்கள் பெரிதெடுத்துப் பாடிய

---

**கம்பனுக்குப் பின் தோன்றிய வைணவ இலக்கியங்கள், இலக்கிய உரைகள், ஆசிரியர்களின் அருளிப்பாடுகள் இவற்றில் எல்லாம் கம்பன் மிகுதியாக எடுத்தாளப் பெறாமைக்கு என்ன காரணம்?**

---

கிருஷ்ணாவதாரத்தைச் சிறப்பித்து மகாபாரதத்தைப்பாடாது, இராமாவதாரத்தைப் பாட எடுத்துக் கொண்டது ஏதேனும் உள்நோக்கம் கொண்டதா என்ற வினா எழுகின்றது.

ஒருத்திக்கு ஒருவன் என்றே தமிழ் இலக்கியங்களில் வலியுறத்தப் பெற்றதே அன்றி, ஒருவனுக்கும் ஒருத்தியே என்ற நிலை இங்கே பெரும்பாலும் வற்புறுத்தப்பட வில்லை. முன்னரே பெண்மை, ஆடவர்களின் கழிகாமத்திற்கு இரையாக்கப்பெற்ற நிலை இங்கே நிறைந்திருந்தது. இந்நிலையில் கிருஷ்ணாவதாரத்தைப் பாடுவதைவிட, 'இந்த இப்பிறவிக்கு இருமாதரைச் சிந்தையாலும் தொடேன்' என்ற இராமாவதாரத்தைப் பாடுவதே தமிழ்ச் சமுதாயத்திற்கும் - பெண்மைக்கும் சிறப்பினைத் தரும் என்ற கம்பனின் மதிப்பீடே



www.saivamonline.com

இராமாவதாரத்தைப் பாடக் காரணமாயிற்று என்று கொள்வது பொருத்தமான சிந்தனைதானா? வேறு காரணங்கள் உளவா?

பிற்காலச் சோழர்கள் பெருஞ்சிறப்போடு ஆண்ட காலத்தில் வாழ்ந்திருந்த கம்பன், எங்கோ, திருவெண்ணெய்நல்லூரில் வாழ்ந்த ஒரு சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப்பட்டான் எனக் கூறப்படுகிறதே! சோழப் பெருவேந்தர்களின் ஆதரவு கம்பனுக்குக் கிடைக்காமல் போனதற்குச் சமயம் சார்ந்த காரணங்கள் ஏதும் இருந்திருக்கக்கூடுமோ? திருத்தொண்டர் புராண அரங்கேற்ற ஊர்வலத்தில் கவிஞருக்குக் கவரி வீசி வந்த சோழர்கள், கம்பன் காப்பிய முயற்சிகளுக்கு உதவ முன்வரவில்லையா?

---

**தமிழ் இலக்கியங்கள் பலவற்றையும் போற்றும் நோக்கில் எழுந்த தமிழ் விடு தூது என்ற பிற்கால இலக்கியம் சிறு சிறு நூல்களை எல்லாம் குறிப்பிட்டும் கம்பனைக் குறிக்காது விட்டுப் போதல் எக்காரணம் பற்றி.?**

---

கம்பனின் இராமாவதார அரங்கேற்றத்திற்கு வைணவத் திருக்கோயில்களிலேயே வாய்ப்பளிக்க மறுப்புத் தெரிவிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறதே! இம்மறுப்பின் பின்னணியில் வருணாசிரம - ஜாதீயக்காரணங்கள் ஏதும் இருந்திருக்கக்கூடுமா? கம்பனின் பெருங்காப்பியத்தில் - சமய பேதமின்றி விஷ்ணுமூர்த்தியும் - சிவபரம்பொருளும் ஒப்பவைத்துப் பாராட்டப் பெறுகின்றனரே! வைணவ அவதாரம் கூறும் காப்பியத்தில் சிவபெருமானுக்குக் கிடைத்த ஏற்றம், கவிஞனின் நெஞ்சில் நிறைந்திருந்த சமய-சமரசத்தின் உண்மையான வெளிப்பாடா? அல்லது சோழர் ஆட்சிக்காலத்தில் சைவம் பெற்றிருந்த மகத்தான வளர்ச்சியின் நெருக்குதலால் விளைந்த கட்டுப்பாட்டுணர்வு கவிஞனை அவ்வாறு பாட வைத்ததா?

உலகத் தரம் வாய்ந்த மகாகவியாகக் கம்பன் இன்று இனங்காணப்பட்டிருக்கிறான். அவன் காப்பிய அரங்கேற்றம் நடைபெற்ற திருக்கோயிலில் வெட்டப் பெற்றுள்ள பலநூறு



www.saivamonline.com

கல்வெட்டுக்களுள் ஓரிடத்திலாவது கம்பனைப் பற்றிய சிறு குறிப்பும் இல்லை என்று கூறப்படுகிறதே என்ன காரணம்?

கம்பனுக்குப் பின் தோன்றிய வைணவ இலக்கியங்கள் - இலக்கிய உரைகள் - ஆசாரியர்களின் அருளிப்பாடுகள் இவற்றில் எல்லாம் கம்பன் மிகுதியாக எடுத்தாளப் பெறாமைக்கு என்ன காரணம்? விஷ்ணு மூர்த்திக்கு இணையாகச் சிவனைப் போற்றிய கம்பனை ஏற்க மாட்டோம் என்ற நிலை நிலவுகிறதா?

தமிழ் இலக்கியங்கள் பலவற்றையும் போற்றும் நோக்கில் எழுந்த தமிழ் விடு தூது என்ற பிற்கால இலக்கியம், சிறு சிறு நூல்களை எல்லாம் குறிப்பிட்டும் கம்பனைக் குறிக்காது விட்டுப் போதல் எக்காரணம் பற்றி?

---

**குறவஞ்சியும், பள்ளு இலக்கியமும், நொண்டி நாடகமும் புதிதாக வடிவமைக்கப்பட்ட காலை, யார் எதிர்த்தார்கள்? மனோன்மணீயமும், குயில் பாட்டும் தமிழ் மக்களால் இலக்கியம் இல்லை என்றா குறைகூறப்பட்டன. புதுமை காணும் துணிவற்ற நம்மவர் நெஞ்சப்பாங்கால் அரிய தமிழ் இலக்கிய வடிவங்கள் பல தோற்றம் கொள்ளாமலேயே நின்ற அவலம் நம்மை வருத்தவில்லையா?**

---

இங்கே நினைவூட்டப்பெற்ற வினாக்களையெல்லாம் முறையாக ஆராய்ந்து விடைதேடிப் பிடித்தால் - ஓர் இலக்கியத்தின் தோற்றத்திற்கும் - கவிஞனுக்கும் - அவன் பாடிய இலக்கியத்திற்கும் சமூகம் பல்வேறு கோணங்களில் எவ்வளவுநெருக்கடிகளை உருவாக்கியுள்ளது என்பது நன்கு புலனாகும். இத்தனை நெருக்கடிகளையும் தாண்டி, வென்று நிற்கும் இலக்கியங்களின் உயிர்ப்பு நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றது.

கி.பி. பதினாறாம் நூற்றாண்டுக்குப்பின் தமிழில் எழுந்த பிரபந்த இலக்கியங்கள், வியப்பூட்டும் அளவு எண்ணிக்கையில் நிறைந்தன. ஆற்றல் மிக்க கவிஞர்கள் கூட புத்திலக்கிய வடிவங்களை முயன்று உருவாக்க விரும்பாது, தங்கள்



www.saivamonline.com

ஆற்றல்களைப் பழைய இலக்கிய வடிவங்களுக்குள்ளேயே கொட்டி மூடி வைத்தனர். பிள்ளைத் தமிழும், உலாவும், கலம்பகமும் ஒரே அமைப்பில் நூற்றுக்கணக்கில் பாடப்பெற்றன. பெரிய மாற்றங்களைச் செய்ய அவர்களை யார் தடுத்தார்கள். சிற்றிலும், சிறுபறையும், சிறுதேர் உருட்டலும் தவிர ஆண் குழந்தைகளின் வேறு விளையாடல்களைக் கூடப் பிள்ளைத்தமிழ் இலக்கியத்தில் இணைத்துப்பாட மறுத்தனர். கலம்பகத்தில் என்ன கட்டுப்பாடு வேண்டிக் கிடக்கிறது? புதிய துறைகள் சிலவற்றைப் புகுத்திப் பார்க்க ஏன் கவிஞர்கள் முன்வரவில்லை? 'மரபு' என்ற கட்டுக்குள் தங்களைத் தாங்களே சிறைப்படுத்திக் கொண்டு, புதுநெறி காணாது ஆற்றல்களை விழலுக்கிறைத்தனர்.

---

**தொடக்கக் காலத்தில் அரிது முயன்று, சில தனி மனிதர்கள் அச்சேற்றிய அரிய நூல்களுக்கு, இன்று வரை இரண்டாவது பதிப்புச் செய்தோமா? இல்லையே. அச்சேறிய பின்பும் கூட இலக்கியங்களைச் சாகவிடுவது அறமாகுமா?**

---

குறவஞ்சியும், பள்ளு இலக்கியமும், நொண்டி நாடகமும் புதிதாக வடிவமைக்கப்பட்ட காலை, யார் எதிர்த்தார்கள்? மனோன்மணீயமும், குயில்பாட்டும் தமிழ் மக்களால் இலக்கியம் இல்லை என்றா குறைகூறப்பட்டன. புதுமை காணும் துணிவற்ற நம்மவர் நெஞ்சப்பாங்கால் அரிய தமிழ் இலக்கிய வடிவங்கள் பல தோற்றம் கொள்ளாமலேயே நின்ற அவலம் நம்மை வருத்த வில்லையா? குமரகுருபரரையும், சிவப்பிரகாசரையும், மீனாட்சி சுந்தரம் பிள்ளையையும்பெற்றிருந்தும்,அவர்களிடமிருந்துபுதிய இலக்கிய வடிவங்களை நாம் பெற இயலாமல் போன நிலை இரங்கத்தக்கதாகவே நெஞ்சில் கனக்கிறது.

ஆங்கிலேயர் வருகைக்குப்பின் தமிழ் அறிஞர்களின் படைப்பிலும், ஆய்விலும் புதிய பரிணாமங்கள் தோன்றின.

நெடுங்காலமாகக் கணிக்கப்படாதிருந்த தமிழ் இலக்கியங்களின் காலங்கள் ஓரளவு முயன்று கணிக்கப் பெற்றன. இம்முயற்சியிலும் சிலரது பிடிவாதங்கள், கோணல் ஆய்வுகளுக்கு வழிகோலின. கால ஆராய்ச்சியில் வேண்டுமென்றே இரு



www.saivamonline.com

முனைகள் தோற்றுவிக்கப் பெற்றன. அறிஞர்கள் ஏதேனும் ஒரு முனையில் நின்று கொண்டு தாம் எடுத்த முடிவுக்கு இலக்கியங்களில் ஆதாரம் தேடினர்.

தமிழ் இலக்கியங்களின் கால நிர்ணயம் துல்லிய மானதுதானா?

இன்று வரை - தமிழ் இலக்கியங்களின் காலம் பற்றிச் செய்யப் பெற்ற ஆய்வுகளும், முடிபுகளும் முற்றாக மறுபரிசீலனை செய்யப்பட வேண்டுவன.

இன்று வரை முடிவு காணப்படாதிருக்கும் திருமூலர், மணிவாசகர், கம்பர் காலங்கள் பற்றி, மறு பரிசீலனை செய்யப்பட்டுத் துல்லியமான கால வரையறைகள் காணப்பட்டாக வேண்டும்.

அரசா? பல்கலைக் கழகங்களா? தமிழ் அறிஞர்களா? யார் இத்தகு பொறுப்பினை ஏற்கப் போகிறார்கள்?

ஒரு சில மாணாக்கர்களுக்கு ஆய்வுத்துறைப் பட்டங்களை வாங்கித் தருவதே-தமது கடமை என்று கருதும் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைகளின் மனப்பாங்கு மாற்றப் பட வேண்டும்.

---

**கவிஞன் பெரியவன். எல்லாரையும் விட மேலானவன். அவன் கட்டுப்பாடற்ற சுதந்திரனாக உலவும் காலமே தமிழ் இலக்கியத்தின் பொற்காலமாகும்.**

---

தொடக்கக் காலத்தில் அரிது முயன்று, சில தனி மனிதர்கள் அச்சேற்றிய அரிய நூல்களுக்கு, இன்று வரை இரண்டாவது பதிப்புச் செய்தோமா? இல்லையே! அச்சேறிய பின்பும் கூட இலக்கியங்களைச் சாகவிடுவது அறமாகுமா?

உரைநடையில் புத்திலக்கியங்கள் செழித்து வருகின்றன. சங்க காலம் முதல் நம் கவிஞர்கள் தொட்டும் பார்க்காத துறைகளில் - சமூக உணர்வோடு நம்மவர்கள் இன்று உரை நடையில் இலக்கியம் படைக்கின்றனர். உரைநடையில் வெளிவந்துள்ள தரம் மிக்க எழுத்தாளர்களின் சரித்திர - சமூக நாவல்கள் - பெருங்காப்பியங்கள் என்று போற்றத்தக்கன



www.saivamonline.com

அல்லவா? தரம் மிக்க நம்மவர்களின் சிறு கதைகள் சங்க இலக்கியப் பாடல்களுக்கு நிகரானவை அல்லவா?

பாரதிக்கும், பாரதிதாசனுக்கும் பின்தோன்றி வளரும் இலக்கிய எழுச்சி தமிழ் இலக்கிய வரலாற்றின் உன்னதமான காலகட்டமல்லவா? இதனை ஏற்றுப் போற்றும் மனோபாவம் நம்மிடம் காணப்படாமைக்கு என்ன காரணம்?

நீண்ட தமிழ் இலக்கியங்களின் மேல் முறையான வினாக்களை எழுப்புவோம். விருப்பு, வெறுப்பின்றி மறு ஆய்வு செய்வோம். உண்மை காண்போம். நாம் உரிய காலத்தில் எழுப்ப வேண்டிய வினாவை எழுப்ப மறுத்தால் - அன்னியர் எழுப்புவர். அப்போது நாம் தலை குனிய வேண்டியிருக்கும்.

தமிழ் இலக்கியங்களின் போக்கில் தாக்கங்களை விளைத்த அகப் - புறக்காரணங்களை - உணர்வுகளுக்கு ஆட்படாது ஆராய்வோம். மொழியும் - இலக்கியமும் நமது. நாம் நமக்குள்ளே மறைவாகப் பழங்கதைகள் பேசுவதில் பயன் ஏதும் இல்லை. சுதந்திரமான, கட்டுப்பாடற்ற சூழ்நிலைகளைக் கவிஞனுக்கு ஏற்படுத்தித்தரும் போதே இலக்கியத்தின் முழு வீச்சும் எழுந்து தோன்றும்.

நம் கவிஞர்களின் - எண்ணத்திற்கும் - படைப்பிற்கும் ஏராளமான கட்டுப்பாடுகள் இருந்து கொண்டே வந்துள்ளன என்பதை - வினவப்பட்ட வினாக்களுக்கு விடை காணும்போது அறிவோம்.

கவிஞன் பெரியவன். எல்லாரையும் விட மேலானவன். அவன் கட்டுப்பாடற்ற சுதந்திரனாக உலவும் காலமே தமிழ் இலக்கியத்தின் பொற்காலமாகும்.

அந்தப் புதிய உன்னதமான காலத்தை உருவாக்கும் அரிய முயற்சியில் நம்மை அர்ப்பணிப்போம்! வெற்றி பெறுவோம்!!

www.saivamonline.com